ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

# <u>பயிற்சி மற்றும் கல்வி உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2024</u>

## <u>இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு</u>

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமை அலுவலகத்தில் நிலவும் பயிற்சி மற்றும் கல்வி உத்தியோகத்தர் பதவி வெற்றிடத்திற்கு உள்ளக பணியாட்குழுவிலிருந்து மற்றும் தற்போது அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**<u>சேவையில் ஈடுபடுத்துவதற்கான நிபந்தனைகள்:-</u>**

இந்தப் பதவி நிரந்தரமானதாகும். ஊழியர் சேமலாப நிதியத்திற்கு மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பைக் கொண்டுள்ளதாகும்.

### 1.1. தகைமைகள் :-

#### 1.1.1 வெளிவாரியான விண்ணப்பதாரிகளுக்காக (கீழ் குறிப்பிடப்படும் 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சமூக விஞ்ஞானம் / மனித வளங்கள் முகாமைத்துவம் அல்லது தொடர்புடைய பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

   மற்றும்

   பதவியுடன் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு வருட கால தொழில்சார் அனுபவம்

2. அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டய நிறுவனமொன்றில் தொடர்புடைய பதவிக்குரிய பாடத் துறையுடன் தொடர்புடைய இடைநிலை பரீட்சையொன்றில் சித்தியடைந்திருத்தல்.

   மற்றும்

   பதவியுடன் தொடர்புடைய துறையில் குறைந்தது ஒரு வருட கால தொழில்சார் அனுபவம்

#### 1.1.2. உள்வாரியான விண்ணப்பதாரிகளுக்காக (கீழ் குறிப்பிடப்படும் 1 அல்லது 2)

1. மேலே குறிப்பிடப்பட்ட வெளிவாரியான விண்ணப்பதாரிகளுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

2. செயற்பாடுகள் / ஆலோசகர் (MA-3) அல்லது (MA-4) வகுதியின் அல்லது முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் சாராத (MA 1-1) II தரத்தின் தொடர்புடைய பதவியில் விடயத்துறையில் குறைந்தது 05 வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**1.2** **<u>வயது</u>**: விண்ணப்ப முடிவுத் திகதியன்று 45 வயதிலும் அதிகமாக இருத்தலாகாது. உள்வாரியான விண்ணப்பதாரிகளுக்கு மேற்குறிப்பிடப்பட்ட வயதெல்லை ஏற்புடையதாகாது.

**1.3** **ஏனையவை:**

அனைத்து விண்ணப்பதாரிகளும்,

i. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ii. பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான உடல் மற்றும் உள ரீதியான ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iii. நன்னடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவுத் திட்டம் :-**

JM 1-1-2016 - (ரூ. 42,600 – 15 x755-53 – 53,925)

இது தவிர அடிப்படைச் சம்பளத்தின் 25% படியொன்று மற்றும் வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்படும்.

**ஆட்சேர்ப்பு முறை :-**

- கீழ் குறிப்பிடப்படும் விடயங்களை அடிப்படையாகக்கொண்டு நடாத்தப்படும் கட்டமைக்கப்பப்பட்ட நேர்முகத் தேர்வு ஊடாக பொருத்தமானவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்

| | |
|---|---|
| தொடர்புடைய மேலதிக கல்வி, தொழில் தகைமைகள் | - 30 புள்ளிகள் |
| தொடர்புடைய மேலதிக அனுபவம் | - 30 புள்ளிகள் |
| ஏனைய தகைமைகள் | - 15 புள்ளிகள் |
| நேர்முகத் தேர்வின்போது காண்பிக்கும் திறமை | - 25 புள்ளிகள் |

மேற்குறிப்பிடப்பட்ட பிரகாரம் தகைமைகளைப் பெற்றுக்கொண்டவர்கள் பயிற்சி மற்றும் கல்வி உத்தியோகத்தர் பதவிக்காக ஆட்சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். ஆட்சேர்த்துக்கொள்ளப்படுபவர்கள் 3 வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்படுவதுடன், தகுதிகாண் காலத்தை சிறப்பான வகையில் நிறைவு செய்பவர்களை பதவியில் நியமிக்கப்பட்ட திகதி முதல் வலுப்பெறும் வகையில் பதவியில் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பதவிக்குரித்தான பதவியுயர்வு மற்றும் ஏனைய அனுகூலங்கள் பதவிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறைக்கமைய மேற்கொள்ளப்படும்.

கீழ் குறிப்பிடப்படும் படிவத்திற்கமைய A4 தாளில் தயாரித்துக்கொள்ளப்படும் விண்ணப்பங்களை **2024.07.20** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு செயலாளர், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, இலக்கம் 14, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 04 எனும் முகவரிக்கு தபாலில் அனுப்புதல் வேண்டும்.

செயலாளர்,
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
## பயிற்சி மற்றும் கல்வி உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்

1. முழுப் பெயர் (தமிழில்) :- ..........................................................................

    (ஆங்கிலத்தில்) :- ..........................................................................

2. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ..........................................................................

3. நிரந்தர வதிவிட முகவரி (தமிழில்) :- ..........................................................................

    ..........................................................................

    (ஆங்கிலத்தில்):- ..........................................................................

    ..........................................................................

4. பாலினம் (ஆண் / பெண்) :- ..........................................

5. விவாக நிலைமை :- ...............................

6. பிறந்த திகதி :- ................................

7. விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :- வருடங்கள். ...........மாதங்கள்.......நாட்கள் ......

8. தேசிய அடையாள அட்டை இல.:-...............................................................

9. தொலைபேசி இல. :- .................................

10. அரச சேவையில் தற்போது வகிக்கும் பதவி :- .........................................

11. முதல் நியமனத் திகதி :- ...........................................

12. சேவை நிலையம் மற்றும் முகவரி :- ..........................................................................

    ..........................................................................

13. விண்ணப்ப முடிவுத் திகதியன்று சேவைக் காலம் :- வருடங்கள். ......மாதங்கள்..... நாட்கள்.....

14. தற்போது வகிக்கும் பதவிக்குரித்தான கடமைகளின் தன்மை (சுருக்கமாக) :-

    .....................................................................................................................................
    .....................................................................................................................................
    .....................................................................................................................................
    .....................................................................................................................................

15. I. கல்வித் தகைமைகள் (சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

| சட்டம் / சட்டத்தரணி பட்டம் | பயின்ற நிறுவகம் | பயின்ற பாடங்கள் | பட்டம் செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

II. பட்டப்பின் படிப்புத் தகைமைகள் :-
(சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

| முதுமாணிப் பட்டம் / பட்டப்பின் டிப்ளோமா | பயின்ற நிறுவகம் | பயின்ற பாடங்கள் | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

16. ஏனைய கல்வித் தகைமைகள் :- (சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை இணைத்தல் வேண்டும்)

| பாடநெறி | பயின்ற நிறுவகம் | பாடநெறிக் காலப் பகுதி | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

17. ஏனைய தொழில் தகைமைகள் :- (சான்றிதழ்கள் ஊடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

| பாடநெறி | பயின்ற நிறுவகம் | பாடநெறிக் காலப் பகுதி | செல்லுபடியாகும் திகதி |
|---|---|---|---|
| | | | |

18. ஏனைய சேவை அனுபவம் :- (சேவைச் சான்றிதழ் ஊடாக உறுதிப்படுத்தப்படல் வேண்டும்)

| வகித்த பதவி | நிறுவனம் | சேவைக் காலம் |
|---|---|---|
| | | |

19. மொழித் தேர்ச்சி :- ( ✓ அடையாளத்தை இடவும்)

| மொழி ஊடகம் | மிகச் சிறப்பு | மிக நன்று | நன்று | சாதாரணம் |
|---|---|---|---|---|
| சிங்களம் | | | | |
| தமிழ் | | | | |
| ஆங்கிலம் | | | | |

20. விண்ணப்பிக்கும் சேவை நிலையம் (உங்களுடைய முன்னுரிமை வரிசைக்கிரமத்திற்கமையக் குறிப்பிடவும். முன்னுரிமையை பின்னர் மாற்றியமைப்பதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.)

| சேவை நிலையம் | மொழி ஊடகம் | |
|---|---|---|
| | சிங்களம் | தமிழ் |
| 1 | | |
| 2 | | |
| 3 | | |

மேலே குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………. ……………………………………

திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

<u>நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :-</u>

மேலே 9,10,11,12,13 ஆம் இலக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

…………………………. ……………………………………

திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை